செ.வெ.எண்:14 நாள்: 07.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா மூன்றாவது அலையை கட்டுப்படுத்த பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா மூன்றாவது அலையை கட்டுப்படுத்த பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் நகராட்சி, சித்த மருத்துவ துறை, மற்றும் வானவில் அறக்கட்டளை இணைந்து கொரோனா விழிப்புணர்வு வார நிறைவு நாள் விழா நிகழ்ச்சியை நாகப்பட்டினம் ரயில் நிலையம் அருகில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வானவில் அறக்கட்டளை சார்பில் கொரோனா விழிப்புணர்வு குறித்து இளைஞர்கள் பங்கேற்ற நாடகம் நடந்தது. இதனை தொடர்ந்து சித்த மருத்துவ துறை சார்பில் கபசுரகுடிநீர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்து, மாத்திரைகளும், நகராட்சி சார்பில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையை எதிர்கொள்ள நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும். இதற்காக சமூக இடைவெளியை பின்பற்றுதல், முககவசம் அணிதல், கிருமிநாசினி அல்லது சோப்பு கொண்டு அடிக்கடி கைகளை கழுவுதல், அதுமட்டுமின்றி பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும். தடுப்பூசி செலுத்தி கொள்வதே கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள சிறந்த வழியாகும் என கொரோனா விழிப்புணர்வு வார நிறைவு நாள் விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பயிற்சி ஆட்சியர் திருமதி.சௌமியா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.சகிலா, நகராட்சி ஆணையர் திருமதி. ஸ்ரீதேவி, வட்டாட்சியர் திரு.ஜெயபாலன், வானவில் அறக்கட்டளை இயக்குநர் திருமதி.ரேவதி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**